[1974 ஏப்ரல் 3]

கிடையாது. 30 வயது உள்ளவர்களுக்குக் கூட, டையபெட்டிஸ் வந்துவிடுகிறது. (குறுக்கீடு) இப்பொழுது இருக்கிறது. ஆகவே, வயதைப் பொறுத்து டையபெட்டிஸ் இருக்கிறது என்ற நிலைமையே கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

உணவுப்பொருள் வழங்கல் கழக டிரைவர்கள் முதலியோர்

*733. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில உணவுக் கார்ப்பரேஷனில் பணியாற்றும் லாரி டிரைவர்கள், கிளீனர்கள் ஆகியோர் 10—8—72 அன்று உணவு அமைச்சரிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு ஏதேனும் கொடுத்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அக்கோரிக்கைகளுக்குள் எவையெவை நிறைவேற்றப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த உணவு வழங்கு துறையிலே பல்லாண்டுகாலம் பணியாற்றுகிற லாரி டிரைவர்ஸ், கிளீனர்ஸ், இப்பொழுது அந்த லாரிகளை வேறு துறைகளுக்கு விற்கிற காரணத்தால் வேலை இழக்கிற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அவர்களது முன்னாள் கோரிக்கைகூட, மாற்று வேலைகள் தங்களுக்குத் தரப்படவேண்டும், அல்லது போக்குவரத்துத் துறைக்காவது அனுப்பப்பட வேண்டுமென்பது. ஆகவே, அவர்களது கோரிக்கைகள் கவனிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பது, லாரிகளை விற்றுவிட்டபிறகு. சென்னை போலீஸ் கமிஷனரிடம் 4 லாரிகள் கொடுத்திருக்கிறோம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு 4 லாரிகள் கொடுத்திருக்கிறோம், மெட்ராஸ் புட் செல்லுக்கு, பட் டிபார்ட்மெண்டில் இருக்கிற போலீஸ் துறைக்கு 3 லாரிகள் கொடுத்திருக்கிறோம். நாங்கள் 4 வைத்திருக்கிறோம். போலீஸ் கமிஷனருக்கு கொடுத்துள்ள 4 லாரிகளுக்கு 4 லாரி டிரைவர்களை அனுப்பினோம். அது போல், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு கொடுத்திருக்கிற 4 லாரிகளுக்கு 4 டிரைவர்களைப் போகச்

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் குடிசை மாற்று வாரியப் பகுதியிலே இல்லை. ஆனால், சிலபேர் தாங்கள் பெற்ற வீடுகளை, சப்-லீஸ், மற்றவர்களுக்கு வாடகைக்குவிடுகிற தன்மைமட்டும் சில இடங்களிலே இருக்கிறது. அது அடிக்கடிக் கண்டுபிடிக்கப்படுகிறது. 426 இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு 4 பேர் மீதுதான் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த 4 பேர் மீதும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எந்தப் புகார் வந்தாலும், அதற்கான நடவடிக்கையை எடுக்க குடிசை மாற்று வாரியம் தவறுவதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தாண்டவராய சத்திரத் தில் 265-ம் எண்ணுள்ள குடியிருப்பை வாங்கிய கோவிந்தம்மாளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த அம்மையார் ஒரு விதவை. அவர் களுக்கு விதிகளெல்லாம் தெரியாது. இருந்த நகைகளை எல்லாம் விற்றுவிட்டு, ரூ. 1,500-க்கு அந்த வீட்டை இன்னொருவரிடத்திலிருந்து வாங்கிக் கொண்டார்கள். வாங்கியவருக்கு ரூ. 100 தண்டனை கொடுப் பதைவிட, விற்றவருக்குத் தண்டனை கொடுப்பதுதான் நியாயம். அந்த அம்மையார், உள்ளபடியே வேதனையோடு, குழந்தை குட்டிகளோடு வந்து கதறி அழுதார்கள். அதனாலே, வாங்கியவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைவிட, விற்றவர்களுக்குத் தண்டனை கொடுப்பதுதான் நியாயம் என்று, அரசு விற்றவர்களுக்குத் தண்டனை கொடுக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நான் கருதுகிறேன். ஆனால், ஏழைகளுக்கு நாம் இரக்கம் காட்டுவ தாகக் கருதிக்கொண்டு, தவறுகளை மலிய விடுவதற்கு யாரும் முற்பட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, ஒரு குடும்பத்தில், தாய்க்கும் தந்தைக்கும் 5, 6 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர் களுக்கு எல்லாம் திருமணம் செய்து வைக்கிறபொழுது, ஒரு வீடு போதாது என்ற நிலை இருக்கும்போது, 4 பேர் சேர்ந்து, குடும்பம் என்று வைத்து, தனித்தனியாகப் பிரியும்போது, அவர்கள் வீட்டுவசதி வாரியத்திற்குத் தாக்கீது அனுப்புகிற நேரத்தில், 4 வீடுகள் பெறு கிறார்கள், 3 வீடுகள் பெறுகிறார்கள் என்ற சூழ்நிலை ஏற்படுகிறதே, அந்தச் சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக, அரசு பரிசீலனை செய்து, பெரிய குடும்பமாக இருந்தால், 2 வீடு, 3 வீடு கொடுக்கலாம் என்ற முறையை அரசு ஏற்படுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.